**Media:** Tamil Murasu
**Date:** 9 June 2024
**Page:** 3

# ‘சமூகத்தில் முதுமையடையவேண்டும்’

பராமரிப்பு நிலையங்களுக்குள் முதியோர் ஒதுக்கப்படாமல், சமூகத்தினுள் முதுமையடைய வழிவகுக்கும் நமது முயற்சிகள் அமையவேண்டும் என்றார் (ஏஜசி) தலைமை நிர்வாகி திரு தினேஷ் வாசுதாஸ்.

உடற்பயிற்சி செய்ய, சேர்ந்து உணவு உண்ண, நிகழ்வுகளைக் கொண்டாட என முதியோர் வெளியில் வருவதும் சமூகத்தினரோடு அன்றாட வாழ்வில் உரையாடுவதும் அவசியம்.

அவ்வாறு சமூகத்திலேயே முதுமையடைய வகைசெய்யும் முயற்சிகள் முதியோரின் உடல்நலத்தை மட்டுமின்றி, மனநலனையும் பேணும் என்றார் அவர். குடும்ப பிணைப்புகளைப் பேணி, நிலைத்தன்மையுடைய தீர்வாக இது அமையும் என்பது அவரின் நம்பிக்கை.

எனவே, ஏ.ஏ.சி எனப்படும் துடிப்பாக மூப்படையும் நிலையங்கள் அக்கம்பக்கங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் எண்ணிக்கை 2030க்குள் கிட்டத்தட்ட இருமடங்காக உயரவுள்ளது.

https://supportgowhere.life.gov.sg எனும் தளம் முதியோர் தேவைகளுக்கு விடையளிக்க வல்லது. தகுதிபெறக்கூடிய மானியங்களைக் குறித்தும் அவற்றுக்கு விண்ணப்பிக்கும் முறை குறித்தும் இத்தளம் விவரங்களைத் தெரிவிக்கிறது. வீட்டு முகவரியைப் பதிவிட்டு, தமக்கு மிக அருகில் உள்ள ஏ.ஏ.சி எது என முதியோர் கண்டறியலாம். இவற்றில் இணைவதற்கு முன்பதிவு அவசியமில்லை.

முதியவர்களின் பராமரிப்பாளர்களையும் கருத்தில் கொள்ளும் ஏஜசி, அவர்களுக்கான பயிற்சிகள், தேவைப்படும் நேரங்களில் தற்காலிகமான வீட்டுப் பராமரிப்பு சேவை, தனிப்பட்ட ஆலோசனை சேவை முதலிய வசதிகளை ஏற்படுத்தி உள்ளது.

சிங்கப்பூரின் அடுத்தகட்ட இலக்கு, முதியோரின் இறுதி ஆண்டுகளில் உடல்நலத் தளர்வைத் தவிர்ப்பதாகும். வயதாகி இறக்கும் முன்னர் நோய்வாய்ப்பட்டு சிரமப்படும் காலத்தைக் குறைக்க, ஹெல்தியர் எஸ்ஜி முதலிய முயற்சிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

பல அக்கம்பக்கங்களில் சாலை வசதிகள் போன்ற உள்கட்டமைப்புகளும் முதியோரைக் கருத்தில்கொண்டு வடிவமைக்கப்படுகின்றன. இவ்வாறு ஒட்டுமொத்த சமூகமாக நாம் ஒருங்கிணைக்கும் வளங்கள் முதியவர்களைச் சென்றடைந்து முழு பலன் ஈட்டுவதற்கு குடும்ப ஆதரவும் மிக அவசியம் என்றார் திரு தினேஷ்.

“நமது மிகப் பெரிய சிக்கல் விழிப்புணர்வு இன்மையே. முதியோர் சுயமாக உதவி நாடி, துடிப்பாக, நிறைவாக முதுமையடைவதற்கான வழிமுறைகள் இன்னும் அதிகமானோரை சென்றடையவேண்டும்,” என்று கூறினார் திரு தினேஷ்.

vishnuv@sph.com.sg




ஏஜசி எனும் ஒருங்கிணைந்த பராமரிப்பு அமைப்பின் தலைமை நிர்வாகி திரு தினேஷ் வாசுதாஸ். **படம்: ஆ. விஷ்ணு வர்தினி**

Source: Tamil Murasu @SPH Media Limited. Permission required for reproduction.